உ

சத்திவடிவேல் சகாயம்.

அருப்புக்கோட்டை யெனவிளங்கும்
திருநல்லூர், சான்றோர் குலதிலகரும்,
சர்வலோக சரண்ய ஸ்ரீ அமுதலிங்கேஸ்பரர்
தேவாலயத் திருப்பணியாளருமான

ஸ்ரீமான் முதலாளி
மு. மு. முத்துஸாமி நாடாரவர்கள்

# சிந்துப்பாடல்.

இஃது
அருப்புக்கோட்டை நாடார்குலமித்திரன்
பத்திராதிபரும்,
தமிழ் சங்கீதவித்துவானுமான
ஸ்ரீமான் சூ. ஆ. முத்து நாடாரவர்கள்
சிஷனும்

ஷையூர் அ. மாயநாடாரவர்கள் குமாரனுமான
அய்யம்பெருமாள் நாடாரால்
இயற்றப்பெற்றது.

அருப்புக்கோட்டை
ஸ்ரீ முத்துமாரியம்மன் அச்சுயந்திரசாலையிற்
பதிப்பிக்கப்பெற்றது.

1925.

அணா 1.

489
27 APR
O.—, IMAP, M
N25
181990.

உ

சத்திவடிவேல் சகாயம்.

அருப்புக்கோட்டை யெனவிளங்கும்

திருநல்லூர், சான்றோர் குலதிலகரும்,

சர்வலோக சரண்ய ஸ்ரீ அமுதலிங்கேஸ்பரர்,

தேவாலயத் திருப்பணியாளருமான

**ஸ்ரீமான் முதலாளி மு. மு. முத்துஸாமி**

நாடாரவர்கள்

# சிந்துப்பாடல்.

இஃது

அருப்புக்கோட்டை நாடார்குலமித்திரன்

பத்திராதிபரும்

தமிழ் சங்கீதவித்வானுமான

**ஸ்ரீமான் கு. ஆ. முத்து நாடாரவர்கள்**

சீடனும்,

ஷெடியூர் அ. மாயநாடாரவர்கள் குமாரனுமான

அய்யம்பெருமாள் நாடாரால்

இயற்றப் பெற்றது

1925

உ

சிவமயம்.

# முகவுரை.

---

மருவிளைதுழவோனுள்ளம் மகிழ்வுற உம்பரேத்த
கருவினையுயிர்கள் தம்மைக் கருணையோடு அழித்தமாது
உருவினைகாட்சிகண்டு அங்கு உவந்திட பரமயோகி
திருவிளையாடல்செய்த செயலுடைப்பாண்டிநாடு.

என்னும் இந்நாட்டிற் சிறந்து விளங்கும் நல்லைபம்பதியில் விளங்கிய மகாபிரபு மு. மு. முத்துச்சாமி நாடாரென்பார் பரோபகார சித்தமமைந்த பாரகமாதாவின் புத்திரரிலொருவராவர். தற்பெருமை காட்டா சாத்மீக குணமும், தமிழ்ப் பாவலர்களையாதரிக்குந் தயாள சிந்தையும், மேலான சிவபக்தியும் அமையப்பெற்றவர். இவ்வுத்தமரால் நாடார் சமுகம நல்லையம்பதியில் ஒப்பற்ற ஓர் சிவாலயத் திருப்பணியையும் இன்னும் பல உபகாரங்களையுங் காணலாயின இவ்வரிய பிரபு பூதவுடம்பை நீத்துப் புகழுடம்பை நிலவச்செய்தமையான், நல்லைநகர் நாடார்கள் அவர் திருநாமம் விளங்க ஓர்வாசகசாலைபமைத்து வருடாவருடம் கொண்டாடுகின்றனர். இவ்வியல்பாளரைநூல் நாயகமாகக்கொண்டு பாடல் ரூபமாகஇந்நூல்எழுதப்பட்டிருக்கின்றது. நந்தமிழ் நாட்டில் முத்தமிழிலொன்றான நாடகச் சார்பான சிந்துப்பாடல்களை சர்வ ஜனங்களின்செவிவழி நுழைந்து உள்ளத்தினித்தலால் இந்நூல் செய்தார் கும்மி, தெம்பாங்கு ஆகிய இருவகையால் முதலாளியவர்கள்ஜீவியத்திற செய்துவந்த சிவதொண்டின்திறத்தையும் அந்தியகாலபிரிவாற்றாமையையும் யாவருந் தெரியும்படி விகசிதமாகக் கூறியிருக்கின்றனர். பாடல்களில் உபயோகித்திருக்கும் பதங்கள் சாதாரணமாய் ஜனங்கள் படித்துத் தெரியப்பட்டவையே யாம் இயற்றியவர்நல்லைநகர் வாசியும் மாயநாடாரென்பவரின் தவப்புதல்வரும்“ நாடார் குல மித்திரன் ”பத்திராதிபர் ரூ ஆ. முத்து நாடாரவர்கள் மாணாக்கர்களிலொருவருமாவர். ஐயம்பெருமாள் நாடாரென்னும் நாமமுள்ளார். நமது குல திலகமுதலாளியவர்கள் அரியகுணங்களை பாவினத்தில் வைத்து வியந்து புகழ்ந்து பாடமுன் வந்ததைபபற்றி பெரிதும் பாராட்டுகின்றோம்.

ஆ. குமரப்ப நாடார்

பெருநாழி.

(சாத்துக்கவிகள்.)

இந்நூலாசிரியர் உபாத்தியாயரும்
அருப்புக்கோட்டை, தமிழ் சங்கீத வித்துவானும்
"நாடார் குல மித்திரன்" பத்திராதிபருமாகிய
ஆ, ஆ, முத்துநாடாரவர்கள் இயற்றியது.

[வெண்பா.]

வையம்புகழ் நல்லூர்மால் முத்துச்சாமியின்மேல்
மெய்யன்புகொண்ட தமிழ் வித்துவான்—ஐயம்
பெருமாளெனும் பேரோன் பேசுங் கவிகளை யெம்
பெருமானே நீ யேற்றுப்பேண்.

பெருநாழிக்கவிராயர்
ஆ, குமரய்யநாடாரவர்கள் இயற்றியது.

(வெண்பா.)

ஆலயமெலாம் விளக்கும் ஐயன்முத்துச்சாமி திருச்
சீலமெலாம் விளங்கச் செப்பினன்—நூலாக
பேராளனையம் பெருமாளெனும் பேரான்
ஆராயும் நல்லிலக்கராளி.

அருப்புக்கோட்டை, ஏனாதிநாதநாயனர் திருமடாலயகர்த்தர்
அமுதலிங்கசுவாமிகள் அருளியது.

(வெண்பா,)

மால்முத்துநாடனுடமாணிக்கனிப்புவியிற்
பால்முத்துப்போன்ற தமிழ் பாடினன்—மேல்முத்துச்
சாமிமுதலாளி புகழ்தங்கவையம்பெருமாள்
பூமியுளோர் தாம்படிப்பார்போற்றி.

கணேசர் துதி.

பூமிபுகழ் சீராளன் புண்ணியனும் எங்கள்முத்து
சாமிமுதலாளி தமிழ்சாற்றவே—நேமியான்
மோமருகனென்னவரும் குஞ்சரத்தின் பூங்களலாம்
மாமலரை உள்ளமதில்வைப்பாம்.

கவி.

புண்ணியமான நல்லூர்புகழ்குலச் சான்றோர் தம்மில்
கண்ணியமாயுதித்து காவியநூல்களாய்ந்தோன்
எண்ணியவாறே நல்லையமுதலிங்கேசருக்கு
பண்ணிய திருப்பணியையபற்றியான் பகர்வன்மாதோ

# கும்மி.

தும்புருநற்கவிவாணர் தமிழ் நிதி
புட்பவனமிகும் நல்லைதன்னில்
சாம்ப முதலிங்கேசர் திருப்பணி
சாற்றியபூமான்மேல் கும்மியிதாய். (1)

நாணின்று பாடிடும் நற் கும்மிதன்னிலே
கானறியாக்குற்றமேதேனும்
மேவின்றுகண்டிடின் தங்கள் மகவென
மேன்மைப்படுத்தியே வைத்தருள்வீர். (2)

இன்னகர்தன்னிலே நாடார்களானவர்
யென்றுமுன் செய்த சிவாலயமாம்
வண்ணமணித்திருப்பணிகள் செய்கையில்
வந்ததோர் மறுப்பை யானுரைப்பேன். (3)

தென்தேசக் காவலர் சேதுபதியவர்
சிற்சிலர் வார்த்தையைதான்கேட்டு
என்னிலந்தன்னிலே ஆலயங்கட்டிட
இசையிலோமென்ன வழக்கெடுத்தார். (4)

சீராசர்புகழ் ராமநாதபுரம்
சேதுபதி சமஸ்தானமதில்
சீருடனேநம்பாள் சிமோன்மனுப்படி
சேதுபதியாடர்வந்ததடி. (5)

இப்படி உத்திரவானதன்பேரிலே
யேற்ற திருப்பணி தான்முடித்து
செப்பவொண்ணு முடிமன்னவர் போற்றவே
செவ்வனே கும்பாபிஷேகம் செய்தார். (6)

மங்களமான பிலவங்கவாண்டதில்
மகிழும் சித்திரைமாசமதில்
பொங்கமுடன்செய்த கும்பாபிஷேகத்தை
புகழப்போகுமோ பூவுலகில் (7)

எட்டுத்திசைபதினாறுகோணமெங்கும்
விட்ட திருமுகத்தாலரசர்
மட்டில்லாவண்டிகள் ஜட்கா ரெயிலேறி
கிட்டியே வந்தார்கள் நல்லைநகர். (8)

தென்டாண்டி-தான்முதல் ஐம்பத்தாறுதேசம்
ஸ்ரீமான்களெல்லோரும் வந்திறங்கி
பொன்கோவிற் கும்பாபிஷேகத்தின் சாக்ஷியை
பூவுலகோமெல்லாம்பார்த்தனரே. (9)

இப்படி செய்ததோர் எங்கள்குலகர்த்தா
யேற்றதோர் உற்சவ மூர்த்திகட்கு
செப்புமுறைப்படி வேண்டிய உற்சவம்
சீர்பெறச்செய்தார் விதவிதமாய். (10)

சித்திரை மாசமுதல்கொண்டு பங்குனி
இத்தலந்தன்னில் முடிவுவரை
பத்தியதாயுள்ள உற்சவமுற்றிலும்
நெச்சிதமாகவே தானடக்க. (11)

தொட்டுவிலகாமலென்றும்பொதுவாக
துலங்கியபண்டுடன் சொந்தமுமாய்
பொட்டிலுப்பட்டி குமாரவேல்பட்டியும்
போற்றுந் திருச்சுளிமாநகரார். (12)

மட்டில்லாப்பேரின்ப வாழ்புளியம்பட்டி
வதுவார்பட்டி நற்கஞ்சநகர்
இட்டமதாய்வளர்க முதைமாநகர்
தேர்ந்ததோர் பாலையம்பட்டி-முதல். (13)

காரியாபட்டி நல்மாமதுரைநகர்
கடற்கரை கொண்டிடுந் தூத்துக்குடி
பாரிலுள்ளோர்பொது ஊர்ப்பண்டு சொந்தமாய்
பல்லாண்டுதோறும் நடத்திவர. (14)

நெல்விளைநற்கிராமம் கடை வீடுகள்
நேசமுடன் தேவஸ்தானத்துக்கு
நல்க்கருசல் சிவல் நாட்டில்பாதிநிலம்
நன்கொடை ரிக்கார்டு செய்துவைத்தார். (15)

இப்படிச் செய்த நம் சான்றோர்குலபதி
சொற்பெரிய முத்துச்சாமியவர்
இப்பெருங்கோவிற் திருப்பணி செய்ததால்
யேற்றதோர் ஸ்ரீமானென்றேஹுதித்தார். (16)

தப்புமுறை விதி சாற்றிடாவுத்தமர்
இப்புவிச்சான்றோர் குலத்துதித்தார்
எப்பெருங்கேசு வழக்கெதுவென்றாலும்
சொற்குறைவின்றி ஜெயம்பெ[illegible] (17)

இக்கருள்ளவர்க்கேற்ற முதலாளி
பொன்பொருள் சேர்கனைபாச விர்த்தியும்
நன்மடம்மேநாவில் கடைவீடு முற்றிலும்
கன்னையில் தொட்டிடில் விண்புகழும். (18)

சித்தவித்தைக்குப தேசிகராம்புகழ்
அதவீதசாஸ்திரம் கற்றவராம்
பத்தரைமாத்துப் பசும்பொன்னுக்கொப்பான
வித்தகரென்கவி முத்துராஜன் (19)

பொன்னடியை தினம்கண்டு தொழுகின்ற
பூபாலன் அய்யம்பெருமாளின்று
மின்மினிசந்திரன் தன் முன்னே நின்றிடும்
விதத்தைதப்போலெனமதித்தருள்வீர். (20)

நன்பெருங் கும்மி தெம்பாங்கென சொன்னதில்
கலபிலாச் சொற்பிழை கண்டிடினும்
தென்புடனே பொறுத்தன்புபாராட்டியே
தேசத்தோர் மன்னித்தருள்புரிவீர். (21)

தேடாமல் வந்த நம் நாடார்குலமித்திரன்
சிறந்துவிளங்கும் ஆபீசும்
வாடாத நம்குல நாடுபுகழ்முத்து
மாரியின் அச்சாபீஸ் வாழியவே. (22)

---

## தெம்பாங்கு.

என்றகவி ஐயாயிரத்திருபத்தோரு மாண்டதிலே
தோன்றுரவுத்திரியாய் தொல்லுலகோர் சொல்வருடம்
எங்கும் புகழ்பெற்ற நமதின்பமுதலாளி
யீசனருளாலே கயிலாசம் சேரலானார்.

கார்த்திகைமாசமதில் கடைசி சுக்ர வாரத்திலே
பார்த்திருந்த இருபத்தைந்தில் பரலோகம் சேர்ந்திட்டாரே
தங்ககுணமான நமது தருமமுத்துசாமி
பொங்குபுகழ் வாசமதில்பூர்வ நல்லநேசர்

அத்தாமாமுனிவர் புத்திரராம சூசைநாயர்
பத்தியுடனருப்புக்கோட்டைபதியாசர் வாழ்வதிலே
வழங்குமுதலாளி புகழ் வளருந்தயவாளி
வேதனருளாலே விண்ணேகினாரினாரே.

வைத்ததொரு மகமைப்பண்டில் வந்தபணம் மிஞ்சியதால்
அத்தரெனுமமுதலிங்காலபத்தை உண்டுசெய்தார்
தருமவிளை பூமி நம்மள் தங்கமுத்துச்சாமி.
கருதுபுகழ்நேசர் ஜெகம் கமழுங்குணவாசர்.

அமுதலிங்காலபத்தால் அருப்புக்கோட்டையே ஜொலிக்க
விமரிசைய தாய்நிலத்தை வேணமட்டும் வாங்கிவைத்தார்
எங்கும்புகழ்பெற்ற நமதின்ப முதலாளி
தங்கத்திருமேனி புகழ் தழைக்கு முத்துசாமி.

அந்தநிலந்தன்னிற்பல வானவித்து மேவிளைய
வந்த வந்த பசுக்களையும் மந்தையாக மேயவிட்டார்
வழங்குமுதலாளி அணிமலர்க்கைவிரலாழி
அழகு திரு வாளர் நம்மை ஆளுந்தயவாளர்.

கற்பகம்போல் பால்கறக்கும் காராம்பசுக்கூட்டம் வந்து
அற்புதமாய் நின்று தின்று அதிலே கோமிபங்தெளிக்க
தங்கதுணமான நம்மள் தருமமுத்துசாமி
பொங்குபுகழ் வாசர் தமிழ்புலவர் மெச்சும் நேசர்.

புண்ணியகாலமானதென்றே பூமான்முத்துசாமியவர்
கண்ணியமாயின்னிலத்தோர் காணநின்று தச்சைசெய்தார்
எங்கும்புகழ் பெற்ற நமதின்பமுதலாளி
யீசனருளாலே நம்மை இலங்கவைத்தார் மேலே,

தச்சைசெய்து கோவில்கட்ட தனக்குக்கஷ்டம் வந்து நீங்கி
இச்சையுடன் வந்தும்பின்னால் எடுத்திட்டாரே நர்த்தாவேலை
தங்கதுணமான நமது தருமமுச்துசாமி
பொங்குபுகழ் வாசமதில் புகழும் நல்லநேசர்.

ஆதிசிவன் கோவில்கட்டி அடுத்துக் கும்பாபிஷேகம்செய்து
நீதியுடன் வாழ்ந்தவரை நீநிலத்தில் கண்டதில்லை
வழங்கிடும்விபூதி யணிவளருமனுநீதி
பழகுங் குணசீலன் அன்பு பார்க்குமனுகூலன்

மாணிக்க [illegible] டிடலாம் கொஞ்சநாளில் இந்த
மாணிக்கவாசகர் போல மண்டலத்தில் காண்போமோ
எங்கும்புகழ் பெற்ற நமதின்பமுதலாளி
ஈசன் விதியாலே கயிலாசம் சேரலானார்.

ஆராரழைத்திட்டாலும் அசையாதிருக்குமன்னர்
ஏரார் எமனழைக்க ஏறிவிட்டார் சிவிகைமீதில
தங்ககுணமான நம்மள் தருமமுத்துசாமி
பொங்குபுகழ் வாசர் இந்திய புண்ய நல்லநேசர்.

ஆடமூக மாடமூக ஐத்துலக்ஷம் ஜனமமூக
பட்டத்துமன்னரென்று பட்டங்கட்டித்தானமூதார்
வழங்குமுதலாளி புகழ் வளருங்கலைபாளி
முழுங்குக்கடலொலிபோல்தவில் முரசொலிக்க சென்
றார்.

மானமூக மயிலமூக மாடப்புறா தானமூக
வானவர்கள் வந்துநின்று வரவை எதிர்பார்த்தழைக்க
எங்கும்புகழ்பெற்ற நமதின்ப முதலாளி
ஈசனடிதன்னை அங்கு எழுந்தருளியானார்.

ஊருக்குநேர்கிழக்கே உற்றதொரு வெள்ளைமடம்
பாரில் சிறந்ததென்று பக்ஷமுடன் சென்றடைந்தார்
தங்ககுணமான நம்மள் தருமமுத்துசாமி
சரசகுண பூமான் முத்துசாமியெனுங்கோமான்.

ஆதிபமுதாம்பிகையும் அமுதலிங்கேஸ்பரரும்
சேதிசெல்லி தானழைக்க சேர்ந்திட்டார் கைலாசபதம்
வழங்கு முதலாளி பகை மன்னவர்க்கோராளி
வையமெல்லாமணக்க அந்த வானுலகடைந்தார்.

முற்றிற்று.

## " நாடார் குல மித்திரன் "

# புத்தகசாலை.

### புத்தக விபரம்.

| | |
|---|---|
| பாண்டியா (ஓர் இனிய செந்தமிழ் நாவல்) | 0-12--0 |
| ஜெம்புலிங்கம் | 0-12—0 |
| சௌந்தரகாந்தி நாவல் | 0—12-0 |
| வாரக் கீர்த்தனை | 0—8—0 |
| க்ஷத்திரியகுல விளக்கம் | 1—0—0 |
| விநோதவிகட கோர்ட்டு, விதவா விவாகக்கேஸ் | 0—4—0 |
| பள்ளிப்பகட்டு | 0—3—0 |
| பாரதபுத்திர பாசுரபூஷணம் | 0—5—0 |
| அஸரியா நாடார் ஜீவிய சரித்திரம் | 0—8—0 |
| மகாமாயன் நாவல் | 0—8—0 |
| அஸரியா நாடார் போட்டோபடம் | 0—3—0 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் பதிகம் | 0—1—0 |
| நடராஜப்பதிகம் | 0—1—0 |
| ஸ்ரீ முத்துமாரியம்மன் திருவிழாச்சிந்து | 0—1—0 |
| செல்வரசக் கீர்த்தனை | 0—3—0 |
| 5-வது நாடார் மகாஜனசங்க கான்பரன்ஸ் ரிப்போர்ட்டு | 0—4—0 |
| நமது குலத்தொழில் யாது | 0—5—0 |
| விகடவேசியர் மாலை | 0—1—0 |
| க்ஷத்திரியன் | 0—2—0 |

குறிப்பு:—8 அணாவுக்கு குறைவான விலையுள்ள புத்தகங்கள் வி. பி. யில் அனுப்பப்படமாட்டா. வி. பி. சார்ஜ் பிரத்தியேகம். ஒரு டஜனுக்குக் குறையாமல் மொத்தமாக வாங்குவோர்க்கு 100-க்கு 12½ கமிஷன் கழித்துக்கொடுக்கப்படும். விபரத்திற்கு எழுதவும்.

விலாசம்:—

" நாடார் குல மித்திரன் " புத்தகசாலை,

நாடார் ஹைஸ்கூல் ரோடு,

அருப்புக்கோட்டை.